**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**
**அசல் வழக்கு எண்.113/2023**

பெயர்–திருமதி.காளீஸ்வரி நாள்.01.04.2026

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.1 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

நானும், எனது அக்கா ராஜாமணியும் தாவாவில் சொல்லப்பட்டுள்ள முகவரியில்தான் வசித்து வருகிறோம் என்றால், சரிதான். 40 ஆண்டுகளாக ராஜாமணியும், 26 ஆண்டுகளாக நானும் மேற்படி முகவரியில்தான் வசித்து வருகிறோம். தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால், அண்ணா துரைசாமிக்கும், அக்கா ராஜாமணிக்கும் பாத்தியப்பட்டது. நான் தாக்கல் பாகப்பிரிவினை வழக்கில் தாவா சொத்து எனது அப்பா பெயரில் இருந்தது எனவும், அவரது பங்கு பிரதிவாதிகள் எங்கள் 3 பேருக்கும் பாத்தியம் உள்ளது என தாக்கல் செய்துள்ளேன். எனது அப்பா 1985–ல் இறந்தார். எனக்கு 1999லும், எனது அக்காவிற்கு 1982லும் திருமணமானது. எனது அப்பா இறந்தபிறகு 2017 வரை பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். 30.11.2017–ல் எனது அண்ணா 3–ம் பிரதிவாதி துரைசாமி வாதிக்கு தாவா சொத்தை விற்றுவிட்ட விவரம் தெரியுமா என்றால், தெரியும். மேற்படி விவரம் எப்போது தெரிந்து என்றால், வாதிக்கு விற்பனை செய்து 6 மாதத்திற்கு பிறகு தெரியவந்தது. மேற்படி வாதியின் கிரைய ஆவணம் செல்லாது என வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால், எனது அக்கா தாக்கல் செய்துள்ளார். அதன் விவரங்கள் எனக்கு தெரியாது. எனது அக்காவைத்தான் கேட்க வேண்டும். நான் தாக்கல் செய்த பாகப்பிரிவினை வழக்கில், எனது அண்ணன் துரைசாமி வழக்கு நடத்தாததால் ஒருதலைபட்ச தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால், எனது அண்ணன் வழக்கறிஞர் வைத்திருந்தார். அதன்பின்னிட்டுதான் தீர்ப்பாகியுள்ளது. நான் சொல்வது உண்மையல்ல என்றாலும், மேற்படி பாகப்பிரிவினை வழக்கு ஒருதலைபட்ச தீர்ப்பு என்றாலும், சரியல்ல. 2018–ல் பாகப்பிரிவினை தீர்ப்பாணையில், இறுதிநிலை மனுவில் வாதி செல்வக்குமார் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால், சரிதான். வாதி 2023–ல் வழக்கு தாக்கல் செய்தது முதல், நான் நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கு நடத்தி வருகிறேன் என்றால், சரிதான். இவ்வழக்கு நிலுவையில் உள்ள போதுதான், நான் சுவாதீனம் கேட்டு நிறைவேற்று மனு எண்.57/2025 தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். மேற்படி நிறைவேற்று மனுவில் தற்போதுதான் வாதி செல்வக்குமாரை தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. 1–ம்

பிரதிவாதிதான் வழக்கு நடத்தி வருகிறார். 2017–ல் வழக்கு பாகப்பிரிவினை வழக்கு நிலுவையில் இருந்தபோது, பஞ்சாயத்து பேசி எனக்கும், 1–ம் பிரதிவாதிக்கும் ஆன பங்கிற்கு தொகையை வாங்கிக்கொண்டோம் என்றால், வாங்கவில்லை. வாதியின் கிரையத்திற்கு நான் சென்றுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி கிரையம் பெற்ற நாளே, கிரைய விவரம் தெரியும் என்றாலும், சரியல்ல. நான் எனது பங்கு தொகையை வாங்கிக் கொண்டபின்பும், மீண்டும் தாவா சொத்தில் இடையூறு செய்ததால்தான் வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், சரியல்ல. வாதி முழு கிரையத் தொகையையும் பிரதிவாதிகளிடம் கொடுத்துதான் கிரையம் பெற்றுள்ளார் என்றால், சரியல்ல. அதன் பின்பு வாதி தாவா சொத்திற்கு வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மற்றிய விவரம் எனது அக்கா சொல்லி தெரிந்துகொண்டேன். நானும், எனது அக்காவும் வாதி பெயர் மாற்றம் செய்த பிறகு ஆட்சேபணை தெரிவித்து வருவாய்துறையில் மனு செய்துள்ளோமா என்றால், எனக்கு தெரியாது. எனது அக்காவைத்தான் கேட்க வேண்டும். நாங்கள் எனது பங்கிற்கான கிரைய தொகையை வாங்கிக் கொண்டதால்தான், வாதியின் கியைர ஆவணத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றாலும், வருவாய் துறையில் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றாலும், சரியல்ல. 2017–ல் இருந்து வாதிதான் விவசாயம் செய்து வருகிறார் என்றார், எனக்கு தெரியாது. தாவா சொத்தில் சோளம் பயிர் செய்திருப்பதாக கேள்விபட்டேன். அதில் வாதி பயிர் செய்தாரா, 3–ம் பிரதிவாதி பயிர் செய்தாரா என்று எனக்கு தெரியாது. வாதிதான் தாவா சொத்தில் விவசாயம் செய்து வருகிறார் என்றால், சரியல்ல. நாங்கள் எனது பங்கை பெற்றுக்கொண்டு, கிரையம் செய்து கொடுத்துவிட்டு, மீண்டும் பணம் பெற வேண்டி இடையூறு செய்து வருகிறோம் என்றால், சரியல்ல. வாதி சட்டப்படியான அனுபவத்தில் இருப்பதால், அதில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால், சரியல்ல. வாதியின் வழக்குப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன் என்றாலும், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.04.01 17:18:14 +0530

District Munsif